Utdannings-
direktoratet

# Eksamen

29.05.2020

PSP5564 Tamil nivå III



Se eksamenstips på baksiden!

Nynorsk/Bokmål

# Nynorsk

| Eksamensinformasjon | |
|---|---|
| **Eksamenstid** | Eksamen varer i 5 timar. |
| **Hjelpemiddel** | Alle hjelpemiddel er tillatne, bortsett frå opent Internett og andre verktøy som kan brukast til kommunikasjon.<br><br>For framandspråka er heller ikkje omsetjingsprogram tillatne.<br><br>Når du bruker nettbaserte hjelpemiddel under eksamen, har du ikkje lov til å kommunisere med andre. Samskriving, chat og andre måtar å utveksle informasjon med andre er ikkje tillate. |
| **Bruk av kjelder** | Dersom du bruker kjelder i svaret ditt, skal dei alltid førast opp på ein slik måte at lesaren kan finne fram til dei.<br><br>Du skal føre opp forfattar og fullstendig tittel på både lærebøker og annan litteratur. Dersom du bruker utskrifter eller sitat frå Internett, skal du føre opp nøyaktig nettadresse og nedlastingsdato. |
| **Informasjon om oppgåva** | Du skal svare på alle dei tre oppgåvene i oppgåvesettet **på tamil**.<br><br>Du får utteljing for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklege område der det er relevant.<br><br>Det er kompetansen du viser i heile oppgåvesettet, som skal vurderast. |
| **Kjelder** | Sjå siste side i oppgåvesettet. |
| **Informasjon om vurderinga** | Sjå eksamensrettleiinga med kjenneteikn på måloppnåing til sentralt gitt skriftleg eksamen. Eksamensrettleiinga finn du på Utdanningsdirektoratets nettsider. |

# Bokmål

| Eksamensinformasjon | |
|---|---|
| **Eksamenstid** | Eksamen varer i 5 timer. |
| **Hjelpemidler** | Alle hjelpemidler er tillatt, bortsett fra åpent Internett og andre verktøy som kan brukes til kommunikasjon.<br><br>For fremmedspråkene er heller ikke oversettelsesprogrammer tillatt.<br><br>Når du bruker nettbaserte hjelpemiddel under eksamen, har du ikke lov til å kommunisere med andre. Samskriving, chat og andre måter å utveksle informasjon med andre er ikke tillatt. |
| **Bruk av kilder** | Hvis du bruker kilder i besvarelsen din, skal disse alltid oppgis på en slik måte at leseren kan finne fram til dem.<br><br>Du skal oppgi forfatter og fullstendig tittel på både lærebøker og annen litteratur. Hvis du bruker utskrifter eller sitater fra Internett, skal du oppgi nøyaktig nettadresse og nedlastingsdato. |
| **Informasjon om oppgaven** | Du skal svare på alle de tre oppgavene i oppgavesettet **på tamil**.<br><br>Du får uttelling for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklige områder der det er relevant.<br><br>Det er kompetansen du viser i hele oppgavesettet, som skal vurderes. |
| **Kilder** | Se siste side i oppgavesettet. |
| **Informasjon om vurderingen** | Se eksamensveiledningen med kjennetegn på måloppnåelse til sentralt gitt skriftlig eksamen. Eksamensveiledningen finner du på Utdanningsdirektoratets nettsider. |

## பகுதி 1

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழ் காணும் கூற்றுக்கள் தவறானவையா அல்லது சரியானவையா என்பதை உங்கள் உரைநடையில் தமிழில் விளக்கி எழுதுக.

1. விபுலாநந்தர் யாழ்ப்பாணத்திலுள்ள காரைதீவில் பிறந்தார்.
2. இவரின் மூன்று பெயர்களில் ஒன்று சாமிதாச மயில்வாகனன்.
3. இவர் தமிழ்மொழியை மட்டும் கற்றிருந்தார்.
4. இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக கடமையாற்றினார்.
5. விபுலாநந்தர் எழுதிய நூல்களில் ஒன்றான யாழ்நூலை ஆங்கிலமொழியிலேயே எழுதினார்.
6. 1947ஆம் ஆண்டு ஆறாம் மாதம் இறைவனடி சேர்ந்தார்.

### விபுலாநந்தர்

விபுலாநந்தர் இலங்கையின் கிழக்குப்பகுதியில் அதிக இயற்கை வளங்கள் கூடிய மட்டக்களப்பில் அமைந்துள்ள காரைதீவில் ஆயிரத்தெண்ணூற்றுத் தொண்ணூற்றி இரண்டாம் ஆண்டு வைகாசிமாதம் மூன்றாம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி. தாயார் பெயர் கண்ணம்மா. இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் தம்பிப்பிள்ளை ஆகும். இவர் இளமையில் நோய்வாய்ப்பட்டு இருந்த போது அவரது பெற்றோர் இறைவனை வேண்டி இறைவனுக்கு அவரைக் காணிக்கையாக செலுத்தி மயில்வாகனன் என்று பெயர் சூட்டினர். இவர் இளமையிலேயே துறவறத்தில் நம்பிக்கை கொண்டதால் தனது பெயரைச் சாமிதாச மயில்வாகனன் என மாற்றிக் கொண்டார்.

மிக இளமையிலேயே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேறினார். பத்தாம் வயதில் அவருடைய கணித ஆற்றலைக் கண்டு அவரை கற்பித்த ஆசிரியர்களும் வியப்படைந்தனர். பதினாறாம் வயதில் «கேம்பிறிச் சீனியர்» பரீட்சையில் அவர் முதலாம்தரச் சித்தி அடைந்தார். தம் இருபதாம் வயதில் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆனார். மட்டக்களப்பில் இரண்டு ஆண்டுகள் வரை ஆசிரியராக பணிபுரிந்தார். அதன் பின் அரசு பொறியியற் கல்லூரியில் சேர்ந்து கற்று, விஞ்ஞான உயர்தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றார். அதே காலத்திலேயே அவர் மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

இவர் சொற்பொழிவு செய்கின்ற போதும் தனித்து உரையாடுகின்ற போதும் இவரின் மொழிப்பாவிப்பு ஒன்றாகவே இருக்கும். மக்கள் அவரின் அறிவுத்திறனையும் தமிழ் எழுத்துக்குரிய இசை அளவையும் இயல்பாக பேசும் திறனையும் கேட்டு விபுலாநந்தர் என்று அழைக்கத் தொடங்கினர். விபுலம் என்றால் அறிவு, ஆனந்தர் என்றால் மகிழ்விப்பவர். எனவே இவரது செல்லப்பெயரான விபுலாநந்தர் அவரின் அறிவியலிற்காக வழங்கப்பட்டதாகும். அவருடைய மனம் துறவு வாழ்க்கையையே பெரிதும் விரும்பியது. அதனால் சென்னையில் உள்ள இராமகிருஸ்ண சங்கத்திற்கு சென்றார். அங்கு அவர் காவி உடையும் ஞான உபதேசமும் பெற்று இராமகிருஸ்ண சங்க துறவியானார். அதன் பின்னரே சுவாமி விபுலாநந்தர் எனவும் அழைக்கப்பட்டார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி இரண்டாம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற இயற்றமிழ் மகாநாட்டுக்கு தலைமை தாங்கி உரை ஆற்றினார். இவர் ஆன்மீக பணிகளுடன் தமிழுக்கும் தமிழ் சமுதாயத்திற்கும் அளப்பரிய பணிகளைச் செய்துள்ளார். இவர் எழுதிய ஐந்நூற்று இருபத்தொரு பக்கங்களைக் கொண்ட யாழ்நூல் தமிழ் இசைக்கு கிடைத்த ஒரு பொக்கிஷம் ஆகும். தமிழ் இசைக்கும் தமிழ்மொழிக்கும் பெருமை தேடித்தந்த யாழ்நூல் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தி ஏழாம் ஆண்டு ஆனிமாதம் வெளியிடப்பட்டது. இறைநெறி, மொழி, தமிழிசை, கீழைத்தேய மேலைத்தேய நாடகங்கள், பழந்தமிழ் நூல்கள் முதலியவற்றை இவர் துருவி ஆராய்ந்தார். கட்டுரைகள் எழுதுவதிலும் நாடகங்களை ஆராய்ந்து ஒப்புநோக்குவதிலும் அவர் மிக வல்லவர். இந்த ஆய்வின் பயனாக ஆங்கிலவாணி, மதங்கசூளாமணி ஆகிய நூல்களும் அவரால் இயற்றப்பட்டன.

விபுலாநந்த அடிகளார் கொழும்பில் ஆசிரியப் பயிற்சி பெற்று ஆசிரியராகவும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப்பேராசிரியராகவும் பணியாற்றினார். அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பேராசியராகக் கடமையாற்றினார். இவ்வாறு ஆசிரியர், கல்லூரிமுதல்வர், பேராசிரியர், நாளிதழாசிரியர், நூலாசிரியர் முதலான பல பொறுப்புக்களை வகித்தார். இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியராய் இறுதிமூச்சு வரையும் அளப்பரிய பணிகள் ஆற்றினார். காரைதீவிலுள்ள சாரதா வித்தியாலயத்தையும் திருகோணமலையில் உள்ள இந்துக்கல்லூரியையும் அவர் நிறுவினார். அவை அவரின் அழியா அடையாளங்களாக இன்றும் திகழ்கின்றன.
இவர் துறவறம் பூண்ட போதிலும் இசை ஆராய்ச்சிக்கும் தமிழ்பணிக்கும் சமூகப்பணிக்கும் முக்கியத்துவம் கொடுத்ததை யாராலும் மறுக்க முடியாது. இவர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தி ஏழாம் ஆண்டு ஆடிமாதம் பத்தொன்பதாம் திகதி காலமானார்.

## பகுதி 2

பின்வரும் வினாவிற்கு 15 வாக்கியங்களுக்கு குறையாமல் தமிழில் எழுதுக.

ஒரு புத்தகவெளியீட்டுக்கு அழைப்பிதழ் ஒன்றை எழுதவும். பின்வரும் விடையங்களைக் கவனத்தில் கொள்ளவும்:

- நேரம், திகதி, இடம்
- புத்தகத்தின் பெயர்
- எழுத்தாளர்
- நிகழ்ச்சிநிரல்:
    - உரைகள்
    - கலாசார நிகழ்ச்சிகள்: நடனங்கள், பாட்டு, …
    - வேறு விடயங்கள்
- நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்

## பகுதி 3

பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து 20 வாக்கியங்களுக்கு குறையாமல் தமிழில் எழுதுக.

1. நீங்கள் ஒரு மிருகவதைக்கு எதிரான சுற்றுலாப் பயணியா? இவ்வினா தொடர்பாக உங்கள் கருத்தை எழுதுக.





2. ஒவ்வொரு வருடமும் சர்வதேச பெண்கள்(மகளிர்)தினம் பங்குனி 8 ஆம் திகதி நோர்வேயிலும் இன்னும் பல நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது. எவ்வகையான சவால்களை அல்லது கடினங்களை பெண்கள் நாளாந்த வாழ்வில் எதிர்நோக்குகின்றார்கள்?

   உதாரணமாக பெண்களுக்கு வேலைத்தளங்களில் தலைமை தாங்கும் பதவிகள் கிடைப்பது எளிதல்ல. இது பற்றி உங்கள் கருத்து யாது? பெண்கள் தினத்தை கொண்டாடுவதற்கு வேறு பல முக்கிய காரணங்களும் உண்டா? நீங்கள் கருதும் முக்கிய காரணங்களை விபரிக்க.

3. சில நாடுகளில் மாணவர்கள் பாடசாலைக்கு அப்பாடசாலைக்கு ஏற்ற சீருடையை அணியவேண்டும் என கட்டாயப்படுத்துவார்கள். ஆனால் நோர்வேயில் விரும்பிய உடைகளை அணியலாம். இது பற்றிய உங்கள் கருத்து என்ன?

Blank side

## Kjelder/Kilder:

**Oppgåve / Oppgave 1**

Virakesari Illustrated Weekly, 14.07.2019.

https://www.google.com/search?q=vipulananthar+tamil&oq=Vipulananthar&aqs=chrome.1.69i57j0l3.24871j0j8&sourceid=chrome&ie=UTF-8

**Oppgåve / Oppgave 3**

https://globalnyt.dk/content/ngo-rejsebranchen-mangler-fokus-paa-dyrenes-lidelser

https://dyr.dk/turister-kan-forhindre-dyremishandling-n6-68

Utdannings-
direktoratet

## TIPS TIL DEG SOM AKKURAT HAR FÅTT EKSAMENSOPPGÅVA:

- Start med å lese oppgåveinstruksen godt.
- Hugs å føre opp kjeldene i svaret ditt dersom du bruker kjelder.
- Les gjennom det du har skrive, før du leverer.
- Bruk tida. Det er lurt å drikke og ete undervegs.

**Lykke til!**

## TIPS TIL DEG SOM AKKURAT HAR FÅTT EKSAMENSOPPGAVEN:

- Start med å lese oppgaveinstruksen godt.
- Husk å føre opp kildene i svaret ditt hvis du bruker kilder.
- Les gjennom det du har skrevet, før du leverer.
- Bruk tiden. Det er lurt å drikke og spise underveis.

**Lykke til!**